பற்றிய கருத்து இந்த மசோதாவில் விவாதிப்பதற்கு இடமில்லாதது என்று தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, in the District Development Council different resolutions are adopted after proper deliberations and representations made by the members participating in the meeting of the District Development Council. But the follow-up action that is being taken is not intimated to the members in the same way as is done in this House, namely, the constitution of an Assurance Committee. So, I suggest that a separate committee be constituted to go into the representations made and the resolutions passed at the meeting of the District Development Council and take follow-up action. Will the Hon. Minister be pleased to make a statement in this behalf.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பில்லில் அது எப்படி வரும்? டி.டி.ஸி. பற்றி பொதுவாகப் பேச ஆரம்பித்தால் முடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள் தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75) பேரவையில் அறிமுகம் எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.